# தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்க
# நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் 2025-2027

## வேட்புமனு தாக்கல் செய்பவர்களுக்கான விதிமுறைகள்

1. வேட்புமனுக்கான பதவிகள் விபரம் :
   **1. தலைவர்**
   **2. துணைத்தலைவர்கள் - 3** (IOCL, HPCL & BPCL மூன்று எண்ணெய் நிறுவனங்களில் இருந்து தலா ஒருவர்)
   **3. பொதுச் செயலாளர்**
   **4. துணைச் செயலாளர்**
   **5. பொருளாளர்**
   **6. செயற்குழு உறுப்பினர்கள் -** மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 நபர்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் உட்பட இணைப்பு சங்கம் வாயிலாக நியமனம் செய்திட பரிந்துரைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

2. 1 முதல் 5 எண் வரைக்கான பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அவர்கள் சார்ந்த மாவட்ட சங்கத்தில் பணியாற்றியிருக்க வேண்டும். அல்லது மாநில சங்கத்தில் ஆயுள் கால உறுப்பினராக குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

3. மேற்படி 1 முதல் 5 வரையிலான பதவிகளில் போட்டியிடும் வேட்பாளரை முன்மொழியும் வழிமொழியும் ஆயுட்கால உறுப்பினர்கள் **(Life Member)** குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலம் ஆயுட்கால உறுப்பினர்களாக நிறைவு செய்திருக்க வேண்டும்.

4. பதவி எண். 6-ன்படி செயற்குழு உறுப்பினர் பதவிக்கு நியமன வேட்பாளர்களை அந்த இணைப்பு சங்கத்தை சார்ந்த பொது உறுப்பினர்களேமுன்மொழிந்து, வழிமொழிந்திட வேண்டும். அவ்வாறு முன்மொழிதல், வழிமொழிதலுக்குரிய உறுப்பினர்க்ள் மாநில சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக மூன்று ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

5. வேட்பு மனு தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் அனைத்து விண்ணப்பங்களும் தேர்தல் குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு சங்க விதிகளுக்கு **(Bye Law)** உட்பட்டு தகுதி வாய்ந்த வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

6. மாவட்டங்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர் பதவிக்கான வேட்பாளர்கள் அவர்கள் சார்ந்த இணைப்பு சங்கங்களின் அனுமதி கடிதத்தோடு வேட்பு மனுவினை தாக்கல் செய்திட வேண்டும்.

7. வேட்புமனு தாக்கல் செய்யும் வேட்பாளர்கள் கீழ்கண்ட ஆவணங்களை வேட்பு மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

   I. உறுப்பினர் எண்ணிற்கான **(Life Membership No.)** உறுதியினை **TNPDA** இணையதள பதிவிலிருந்து உறுப்பினர் எண் பக்கத்தினை பதிவிறக்கம் செய்து இணைக்கவும்.

   II. முன்மொழிபவரின் உறுப்பினர் எண்ணிற்கான **(Life Membership No.)** உறுதியினை **TNPDA** இணையதள பதிவிலிருந்து உறுப்பினர் எண் பக்கத்தினை பதிவிறக்கம் செய்து இணைக்கவும்.

   III. வழிமொழிபவரின் உறுப்பினர் எண்ணிற்கான **(Life Membership No.)** உறுதியினை **TNPDA** இணையதள பதிவிலிருந்து உறுப்பினர் எண் பக்கத்தினை பதிவிறக்கம் செய்து இணைக்கவும்.

   IV. வேட்புமனு தாக்கல் செய்யும் நபரின் கீழ்கண்ட ஆவணங்களின் நகல் 2 பிரதிகள்
   a) வேட்பு மனு தாக்கல் செய்பவரின் ஆதார் கார்டு
   b) எண்ணெய் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தின் **(Agreement or DPSL)** முதல் பக்கத்தின் நகல் (மனுதாரரின் கையொப்பம் சரி பார்த்திட)

   V. வேட்புமனு விதிமுறைகள் குறித்த உறுதிமொழி கடிதம்.

... 2 ...

8. சங்கத் தேர்தலில் செயற்குழு உறுப்பினர் பதவிக்கு பரிந்துரைக்கும் இணைப்புச் சங்கங்கள் தங்களது சங்கம் 2023-24 ஆண்டு வரையிலான மாநில சங்கத்திற்கு செலுத்த வேண்டிய இணைப்பு கட்டண தொகையினை **(Affilliation Fees)** நிலுவையில்லாமல் 31.03.2024ம் தேதிக்குள் செலுத்தியிருக்க வேண்டும்.

9. அனைத்து பதவிகளுக்கான விண்ணப்பங்களும் மாநில சங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரியில் பதிவேற்றம் செய்து, அதன் ஆவணங்களை வேட்பு மனுவில் கண்டுள்ள தேர்தல் அலுவலர் முகவரிக்கு 12.03.2025 மாலை 6 மணிக்குள் கிடைக்க செய்ய வேண்டும். மின்னஞ்சல் முகவரி : **election.tnpda@gmail.com**

10. நிர்வாக குழு மற்றும் செயற்குழு பதவிகளில் ஏதேனும் ஒன்றிற்கான பதவிக்கு வேட்பு மனு பெறப்படவில்லையெனில் அப்பதவி காலியிடமாக அறிவிக்கப்படும்.

11. அனைத்து பதவிகளுக்கும் எண்ணிக்கை அளவிற்கான சமமான எண்ணிக்கையில் மட்டுமே தகுதி வாய்ந்த விண்ணப்பம் பெறப்பட்டிருக்குமேயானால், அவர் போட்டியின்றி தேர்வு பெற்றவராக அறிவிக்கப்படுவர்.

12. சங்க விதிகளுக்குட்பட்டு குரல் வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் நடைபெறும்.

13. தேர்தல் குழுவினரின் முடிவே இறுதியானது.

**மேற்படி தேர்தல் விதிமுறைகள் மற்றும் சங்க விதிகளை (Byelaw) நான் முழுமையாக அறிந்து கொண்டேன். அதன்படி நான் நடந்து கொள்வேன் என்று உறுதி கூறுகின்றேன்.**

**தேதி :** **வேட்பாளரின் கையொப்பம்**

---

## தேர்தல் அலுவலரின் குறிப்பு

................................................................................... அவர்களிடமிருந்து

(வ.எண்............) ............................................................... பதவிக்கான வேட்புமனு

இன்று ............................................... மணிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது.

தேர்தல் அலுவலர்